**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** **நாள் : 28.12.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், கொளத்தூர் மற்றும் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து இன்று (28.12.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் கொளத்தூர் மற்றும் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து இன்று (28.12.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்/சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் அவர்கள், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் 70 அடி சாலை, ராம் நகர்-செல்லியம்மன் காலனி மற்றும் பாலாஜி நகர் பிரதான சாலை-பாரதி நகரில் ஆகிய பகுதிகளில் புதிதாக சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் அமைப்பதற்கான இடங்களைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74, பெரம்பூர், ஜமாலியா, சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்தினை மேம்படுத்துவது குறித்தும், ஏகாங்கிபுரம் லிங்க் சாலை, ராஜீவ் காந்தி நகர்-சென்னை நடுநிலைப்பள்ளி மற்றும் மங்களபுரம்-சென்னை தொடக்கப்பள்ளிகளில் மேற்கொள்ளப்படவுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், ஓட்டேரி, சுப்புராயன் தெருவில் உள்ள சென்னை மாவட்ட கிளை நூலகத்தினை மேம்படுத்துவது குறித்தும், வார்டு-72, வியாசர்பாடி, கன்னிகாபுரம், டாக்டர் அம்பேத்கர் சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., திரு.வி.க.நகர் மண்டலக் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.கணேசன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.எ.நாகராஜன் திருமதி கு. சாரதா, திருமதி யோக பிரியா, திருமதி எம்.தாவூத் பீ, திருமதி பி.அமுதா, திருமதி சி. ஸ்ரீதனி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.